



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை செய்யப்பட்ட கவிதை



மஜீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rs.200/=

Thadai Seyyappatta Kavithai ✦ collection of poems
by U.L.Mabrook, 199,Arafa School Road, Addalaichenai -01.
Sri lanka© U.L.Mabrook ✦Published by Yathra ✦
First Edition August 2003 ✦ Layout A.Azeez Nizardeen ✦
Printed at Comprint Systems 334 A, K.Cyril C. Perera Mw. Colombo 13
Cover Photograph :CIC Agri Technology✦ ISBN 955-98318-0-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எழுத்துத் துறையில் நான்
நடக்கப் பழகிய போது
விழுந்து விடாமல்...
விரல் கொடுத்தோர்க்கும்

என் ஊர்
நூலகத்துக்கும்.

# கவிக்கோ அப்துல் ரகுமான்
# அவர்களின் ஆசியுரை

ஒவ்வொரு கவிஞனுக்குள்ளும்
தடை செய்யப்பட்ட கவிதைகள்
இருக்கும்

அவற்றில் சமூகத்தால்
தடை செய்யப்பட்ட கவிதைகள்
மட்டுமல்ல
கவிஞனாலேயே தடை செய்யப்பட்ட
கவிதைகளும் இருக்கும்

தடை செய்யப்பட்ட கவிதைகளை
விடுவிப்பதற்குத்
துணிச்சல் வேண்டும்
அந்தத் துணிச்சல்
மப்றூக்கிடம் இருக்கிறது

கவிதைகளில்
சிறைக் கதவுகள்
திறக்கும் சத்தமும்
விலங்குகள் ஒடியும்
சத்தமும் கேட்கிறது

இந்த உணர்வுகளின்
சுதந்திரத்தை
வாழ்த்துகிறேன்.

17.1.03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதற்கொரு சபாஷ் போடலாம்
## (மூத்த ஒலிபரப்பாளரிடமிருந்து)

கவிதை என்பது
ஒரு கவிஞனுடைய பட்டறிவின்
வெளிப்பாடு என்று கூறுவார்கள்
புலமைப்பெற்றோர்.
'தடைசெய்யப்பட்ட கவிதை'
என்ற தலைப்பிலே
தன் உணர்வுகளை
கவிதைகளின் கருவாக்கி
சொல்லுருவில் சொல்லியிருக்கிறார்
அருமைத் தம்பி யூயெல் மப்றூக்.

நெற்றியிலே பத்திரிகையாளன்
என்று எழுதியிருந்தாலும்
ஒலிபரப்பை ஒரு சவாலாக எடுத்து அதிலும்,
எதிலும் சளைத்தவர் அல்ல என்பதை
சூரியன் எப். எம் வானொலி நிகழ்ச்சிகள் மூலம்
நிறுவி வருகிறார் யூயெல் மப்றூக்.
அதற்கொரு சபாஷ் போடலாம்.



கன்னித் தமிழை கவி வடிவில்
கனலாய் கக்கும் ஆற்றல் மிக்கவர்.
அது மாத்திரமல்ல, இனித்த தமிழை
நேயர் உள்ளத்தை துளைத்துத் திணித்து
ஆங்கோர் கோடியிலே
குடில் கட்டிக் கொண்டுள்ளார்.
இவர் விசிறிகள் விஷயம் உள்ளவர்கள்.

'நேற்றைய காற்றிலே' கவித்துவச் செருக்குடன்
புவிகேட்கக் கவி பாடி,
'நிலவோடு நீண்ட கதை'யில்
கட்டுண்ட காதல் கதை பேசி,
இசை நுரைக்கும் திரை இசையை
சரியாக நிரைப்படுத்தி தருவதில்
ஒரு வல்லவர் அத்துடன் நல்லவர்.
எதனையுமே நிதானித்துச் செய்பவர்.

தமிழ் மொழிமீது இவர் கொண்ட
அளவில்லாப் பற்றும்,
இவர் கவி ஆற்றலும்,
ஒலிபரப்புத் துறையில் இவரின் ஆர்வமும்
மிக மிக மெச்சத்தக்கன.

வாழ்க இவர் கலைப்பணி!

**சி. நடராஜசிவம்**
ஆலோசகர் சூரியன் எப். எம்.
ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
கொழும்பு 01 இலங்கை
02. ஓகஸ்ட் 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குரல் கேட்கிறது

இந்த சிட்டுக்குருவிகள் பாடும்
மண்ணிலிருந்து இன்னுமொரு
சிட்டுக்குருவி தோன்றியதைப் போல,
நண்பர் மப்றூக் எனக்குத் தென்படுகிறார்.
அவர் ஒருநாள் என்னை என் தொழில் தளத்தில்
சந்திக்க வந்தார்.
அன்றுதான் எமது முதல் சந்திப்பு.
கதைத்த போது அறிந்தேன்
அவரது கவிதை உள்ளத்தை.
உலகத்தை சிறியதாகச் சுருக்கி, தன்னை உயர்த்தி
சில அற்பர்கள் காட்டுகின்ற கவிதை உலகத்தை
முற்று முழுதாகவே ஏற்றுக் கொள்ளாமல்,
அது ஓர் உயரிய கலை,
கடல் திமிங்கிலத்தைப் போன்று
திமிருகின்ற கவிதையை மிகலாவகமாக வாலாயப் படுத்தி
எடுத்து தன் கைக்குள் 'துள்ளுமாவாக'
சமைத்தெடுக்க வேண்டுமென்பது
இந்த இளங்கவிஞனுக்கு விளங்குகின்றது.
அது போதும் இங்கு ஆயிரம் கவிஞர்கள்
பூத்தமாதிரித்தான்.

புத்தி ஜீவித் தனத்தை வைத்து
கவிதை பாட முடியாது என்பது இந்த மண்ணில்
நிரூபிக்கப்பட்ட உண்மை.
இன்னும், சாயம் கழராத நாட்டார் பாடல்களைப் பாடிய
கவிஞர்கள் அறிவில் சிறந்த
ஆத்மாக்கள் அல்ல. கள்ளங் கபடமற்ற உள்ளங்கள்
கொண்ட அந்த பாமர பாட்டரசர்களின் பாடல்களின்
ஆழத்தை இன்னும் நம்மால் பூரணமாக இறங்கி அறிய
முடியாமல் இருக்கிறது. இந்த உண்மை மப்றூகுக்கு
ஓரளவு விளங்கியிருக்கிறது. அவர் தன் காலை
உயர்த்தி அந்தரத்தில் நின்று கவிதை பாடாமல்
அதை இந்த மண்ணில் ஊன்ற முயன்றிருக்கிறார்.
அவருக்கு கவிதையின் பாஷைகள் புரிந்திருக்கின்றன.
தமிழ் தெரிந்தால் மாத்திரம் தமிழில் கவிதைகள்
எழுதிவிட முடியாது என, நான் பல இடங்களில்
சொல்லியிருக்கிறேன்.
கவிஞனுக்கு இந்த இயற்கையை
வாசிக்கக் கூடிய ஆயிரம் மொழிகள் தெரிய வேண்டும்.



மப்றூக் இந்த பாஷைகளின் எழுத்துகளையேனும்
அறிந்த வண்ணமிருப்பது எனக்கு
பெருமையாக இருக்கிறது.

இந்த மண்ணின் கவிதைகள்
இன்று அடைந்துள்ள மகத்துவத்தை
நான் இங்கு சொல்லத் தேவையில்லை.
நாங்கள் வானத்தைப் போன்றவர்கள்
பூத்துத்தான் காட்டத்தெரியும்.

ஓர் ஆணால்
ஒரு பெண் அடைகின்ற இன்னல்களை

"என் செல்ல லாத்தாண்டேய்
எனக்கிந்தச்
சோகையன் வேணாண்டேய்
காக்கத்தரிசில கஞ்சி வடிக்கிறான்
காறாத்தால் சீனில கணக்குப்
பார்க்கிறான்
ஒட்டிமீன் ஆக்கினா வேணாண்டு
சொல்லுறான்
ஓராமீன் ஆக்கினா சட்டிய
உடைக்கிறான்
வேலிக்காலுக்குள்ள
மூத்திரம் பேயிறான்
எண்ணத்தலையில
மண்ணள்ளிப் போடுறான்

என் செல்ல லாத்தாண்டேய்
எனக்கிந்தச்
சோகையன் வேணாண்டேய்"

என்றெல்லாம் ஆயிரம் ஆயிரமாகப்
பாடிய 'பொல்லடி'க் கவிஞர்கள்தான் எமக்கு
மூதாதையர்கள். இந்தப் பாடலில்
ஓர் ஆணின் அசிங்கங்களும்
அதனால் ஒரு தூய்மையான பெண் அடையும்
இன்னல்களும் சிறப்பாக கலைத்துவமாக
வெளிக்காட்டப் பட்டிருப்பது மாதிரி, இப்போதைய
எந்தக் கவிஞர் பதிந்திருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே,
மண்ணை ஒட்டிய படைப்புக்களுக்கு நண்பர் மப்றூக்
இனி வரும் காலங்களில் முக்கியம் கொடுக்க வேண்டும்.
அப்போதுதான் இயற்கையாக நமக்கு கவிதை
பொங்கும். நாம் ரொட்டியும் சம்பலும்
சாப்பிடுகின்றவர்கள் அல்லவே! தயிரும் வாழைப் பழமும்
போட்டு சோறு கரைத்து முழுங்கையால் ஒழுகுவதைக்
கூட நக்கிச் சுவைப்பவர்கள். அதன் ரசமும் ருசியும்
நமக்குத்தான் தெரியும். திராய் சுண்டலுடன் சோற்றை
கமுகம் பட்டைக்குள் கட்டிவைத்து சிறிது நேரத்திற்குப்
பின் அவிழ்த்துச் சாப்பிட்டவன் நம் ஊரான். அதன்
மணத்தில் மகிழ்ந்தவன். இவையெல்லாம் எதைக்
காட்டுகின்றன? இயற்கையிலே லயித்து
வாழ்ந்திருக்கிறான் எமது மண்ணின் மகன்
என்பதையல்லவா? அந்த லயிப்பு நமக்குத்
தேவையில்லையா! நாமென்ன பெயர் தெரியாத 'ஹராம்'
குட்டிகளா? எவனெவனின் சாயலிலெல்லாம்
சிக்கிச் சீரழிய.

நமது பழமைகளில் இருந்தே
புதுமையைத் தேடுங்கள் மப்றூக்.

நண்பர் மப்றூக் அந்தச் சந்திப்பிற்குப் பிறகு இன்னும்
என்னைச் சந்திக்கவே இல்லை. தொலைபேசியில்
ஒருதரம் கதைத்திருக்கிறார். அது- இந்த உரை
எழுதுவது சம்பந்தமாக. அவரது குரலை அடிக்கடி
வானொலியில் கேட்பதற்கு சந்தர்ப்பம் இல்லை.
ஏனெனில் சூரியன் எப்.எம். இங்கு பிடிபடுவதில்லை.
எப்படி இருக்கிறீர்கள்
நலமா?
கவிஞனாகி விட்டீர்கள்
மிக ஒழுக்கமாக இருங்கள்
ஒரு பத்தினி போன்றவன் கவிஞன்
ஒழுக்கம் கெட்டவர்களின்
பட்டியலில் சேர்ந்து
கவிஞனின் மானத்தை
வாங்கி விடாதீர்கள்.

**சோலைக்கிளி**
கல்முனை
20.07.2003





சின்ன வயதுப் புகைப்படங்களை
சேர்த்து வைத்து மகிழ்வோமே
அது போலானதொரு இனிய முயற்சிதான் இது.

இந்த எழுத்துக்களில் அனேகமானவை
என் ஆரம்ப காலத்து ஆர்வங்கள்.
அதிகபட்ச தவறுகளோடு
மழலை மொழி ரசிக்கப்படுவதில்லையா?
அந்த ஒரேயொரு நம்பிக்கையில்தான்
இது தொகுதியாகிறது.

ஹோர்மோன்கள் அடங்காப்பிடாரித்தனமாய்
மனசுள்ளும், உடலுள்ளும் மாயம் செய்த
இரண்டுங்கெட்டான் வயதுகளின் உணர்வை.....
ஒவ்வொரு தோட்டாவும் வெடித்து ஓயும் நிமிடங்களில்
எனக்குள் நிகழ்ந்த நடுக்கத்தை,
பயத்தை, சிதைவுகளை, நாவரட்சியை.....
நாங்கள் அகதிகளாகவும், அநாதைகளாகவும்
நடுத்தெருவில் அலையும் போது
அறிக்கைகளால் மட்டும் அட்டகாசம் செய்யும்
எங்கள் தலைவர்களை நினைக்கையில்,
நெஞ்சுக்குள் நிகழ்ந்த
பூகம்பத்தை, குமுறலை,
கோபத்தை, அழுகையை.....
இப்படித்தான் எழுத்துக்களில் மட்டுமே அதிகமாய்
என்னால்
இறக்கி வைக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத்தில்,
என் பாதிப்புக்களின்
பதிவுகள் அல்லது பதிப்புகள்தான் இவை!

□

வாசிப்பு என்பது என் இளவயது பழக்கம்.
நண்பர்கள் மாதிரி புத்தகங்கள் எனக்கு.
நல்ல புத்தகங்கள் மாதிரி
நண்பர்களும் இருக்கிறார்கள்.

எழுத்தில் தவழக்கூட முடியாத பராயத்தில்
பகுத்துப் பார்க்காமல்
இலக்கியம் என்கிற முகப்புடன் கிடைத்த
எல்லாவற்றையும் உள்வாங்கிக்
கொண்டுதான்
எழுதத் தொடங்கினேன்.

அந்த வகையில்,
சில கவிஞர்களின் தாக்கம்
என் எழுத்துக்களில் தவிர்க்க முடியாமல்
சில இடங்களில்
துருத்திக்கொண்டு தெரியலாம்!
ஆயினும் வெட்கப்படவில்லை
அவைகளை அப்படியே இத்தொகுதியில்
வைத்திருக்கின்றேன்.

ஏனெனில்,
நான் நடக்கப் பழகிய போது
எனக்கு
பிடிமானமாய் கிடைத்த விரல்கள் அவை!

□

ஒவ்வொருவருக்குள்ளும் ஏதோ
ஒரு இலக்கு இருக்கும் இலட்சியம் இருக்கும்.
கூடப்படித்தவர்களெல்லாம்
வைத்திய பொறியியல் கனவுகளுக்குள்
சிக்கித் தவித்த போது
கலை இலக்கியத் துறைக்குள் கால் பதிக்க
வேண்டுமென்பதே
என் இலக்காக இருந்தது



இலக்குகள் நிறைவேற இறைவனின் அருளும்
சில நல்ல மனிதர்களின் அன்பும் அவசியமல்லவா?

அந்தவகையில்
பத்திரிகை, வானொலித் துறைகள் நோக்கிய
என் பயணத்துக்கு
பாதைகள் செய்து தந்த
வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு. எஸ். நடராசா
அவர்களையும்
சூரியன் எப். எம்
ஆலோசகர் திரு நடராஜ சிவம் அவர்களையும்
அன்போடு ஞாபகித்துக் கொள்கிறேன்
என்றும், எனது நன்றிக்குரிய நல்ல மனிதர்கள்
இவர்கள்!

இலக்கியத்தில் கவிக்கோ அப்துல் ரகுமானும்,
இரண்டுமுறை சிறந்த கவிதைத் தொகுதிக்கான
சாகித்திய விருது பெற்ற எனது மண்ணின் மணம்
பேணும் இலட்சியக் கவிஞர் சோலைக்கிளியும்
நான் மிகவும் நேசிப்பவர்களில்,
என்னை அதிமாக பாதித்தவர்களில் இருவர்.
அன்புக்குரிய அவர்களிடமிருந்தும்,
ஒலிபரப்புத்துறைக்குள் என்னை உள்வாங்கிய
நடா அண்ணாவிடமிருந்தும் ஆசிகள்
கிடைத்திருக்கின்றன.
இதை விடவும் ஆனந்தம் வேறென்ன?

□

என் சிறுவயது எழுத்துக்களை நெறிப்படுத்தி
எனக்குள் ஆர்வம் வளர்த்த மூத்த கவிஞர்
அன்புடீன் மறக்க முடியாதவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு கிடைத்த நல்ல நண்பர்களில் ஒருவர்
சகோதரர் ஜாமாலியா தாஹிர்.
இந்த தொகுதி வெளிவருவதில் அவருக்கு அதிக
பங்குண்டு.

அதேபோல் நீர்கொழும்பு ராஜன் அண்ணா
இந்தத் தொகுதியை வெளிக்கொணர்வதில் எனக்குக்
கிடைத்த மற்றொரு ஆதரவு.

மற்றும் என் ஒவ்வொரு அசைவிலும் என்னோடு
இந்த நூல் முயற்சியில் பங்கெடுத்தவர்
நண்பர் கே. எல். றமீஸ்டீன்.

இப்படி எனது இந்த முயற்சிக்கு இன்னும் பல நல்ல
மனசுகள் தோள்கொடுத்திருக்கின்றன.

தட்டச்சு செய்து தந்த அருந்ததி அக்கா,
பக்கங்களையும், அட்டைப்படத்தையும்
வடிவமைத்து அச்சிட்டுத்தந்த
அஸீஸ் நிஸாருத்தீன், மனாப்,
மற்றும் நண்பர்களுக்கும்,யாத்ரா வெளியீட்டகத்தாருக்கும்
என் படைப்புக்களுக்கு களம் தந்த
ஊடகங்களுக்கும் என் நன்றிகள்.

சந்திர கலா எனப்படும் என் தோழி
சந்திராவையும் அன்போடு
ஞாபகித்துக் கொள்கிறேன்.

தமிழ் மீது என்னைத் தாகிக்கச் செய்து,
தமிழ் கொண்டு எந்தன் தாகம் தீர்க்க முயன்ற
மரியாதைக்குரிய என் தமிழ் ஆசான்
என். சம்சுதீன் அவர்களை அன்போடு
இக்கணத்திலும் நினைவு கூர்ந்து கொள்கிறேன்.

என்றென்றும் அன்புடன்

**பூயெல் மப்றூக்**
02 ஓகஸ்ட் 2003



# யாத்ராவிலிருந்து

## படைப்பாளி பற்றி:
## சிறு குறிப்புகளாய் சில குறிப்புகள்

ஒரு நல்ல வாசகன், ரசிகன், கலைஞன்.
இவரின் இளமைக்காலக் கனவே
கலை இலக்கியத் துறைதான்!

பாடசாலைக் காலத்திலேயே
பத்திரிகை நடத்தியவர்.
பத்திரிகையாளனாக வேண்டுமென்கிற
தனது இலக்கை அடைய,
மிக இளவயதில் கிடைத்த
அரச உத்தியோகத்தை கை விட்ட இவர்,
வீரகேசரி ஆசிரியர் பீடத்தில் சிறிது காலம்
கடமையாற்றினார்.

கல்லூரி வயதுகளிலேயே
கவிதை எழுதத் தொடங்கியவர்.
பல பத்திரிகை, சஞ்சிகைகளில்
இவரின் கவிதைகள் உட்பட பல்வேறு
படைப்புக்கள் வெளிவந்துள்ளன.

1999 ல் அகில இலங்கை ரீதியாக
கவிதைப் போட்டியில் முதலாமிடத்திற்காய்
இவர் பெற்ற 'இளைஞர் விருதும்'
அதே ஆண்டு அறிவிப்புத் துறையில் கிடைத்த விருதும்
குறிப்பிடத்தக்கவை.

கொழும்பு பல்கலைக் கழகத்தில்
ஊடகத்துறை டிப்ளோமா
பட்டம் பெற்றுள்ள இவர்
கடந்த ஐந்தாண்டு காலமாக
சூரியன் எப். எம். வானொலியில்
அறிவிப்பாளராக கடமையாற்றி வருகிறார்.

தடை செய்யப்பட்ட கவிதைகளாய் வரும்
மப்றூக்கின் கவிதைத் தொகுதி யாத்ராவின்
பாதையில் ஏழாவது மைல் கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரூபமான ஏதோவொன்று
எனக்குள் தீப்பொறிந்து போகிறது
உன்னை
நினைத்துக் கொள்ளும் போதெல்லாம்

எது அது?
அறிவதாயில்லை மனம்
ஆயினும்
நினைக்க நினைக்க உன்னை
பொறி
நெருப்பாயென்னுள் நீண்டு எரிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எரிதலென்பது
எரிதலில்லை
கொஞ்சம் சுகம்
கொஞ்சம் அவஸ்தை
கொஞ்சம் துயரம்
நிறையவே காதல் தருமிது
நிஜமான எரிதலென்கிறீர்களா?

நினைத்த போதுன்னை
பற்றிய தீ
என்னுள்
உன் நினைவுகள் கலங்கும் போதும்
நீண்டு கொண்டேயிருக்கிறது


எரியும் நெருப்பில்
சாம்பராய் உதிர்வேன்
சாம்பலென்பதும் உன் நினைவுகளேயென்று
அறியவில்லையா நீ?

ஆயினும்
இழப்புக்களென்பது இன்னுமில்லை
தினமென்னுள் நடந்து போகும்
இந்த தீ விபத்தில்

என்ன ஒரு திருப்தி
உன் நினைவுகளாலேயே எரிந்து
உன் நினைவுகளாகவே
உதிர்ந்து போகும்
இந்த வாடிக்கை விபத்து

04 மே 1997 தினகரன்





# செத்துப் போனதாய் சுதந்திரம்

அவர்கள்
அவர்கள் இதயங்களை கிழித்தே
தோளில் போட்டு
தூக்கி வந்தனர்

இரத்தமும் இரக்கமும்
இதயத்தை விட்டு வழுக்கி..வழுக்கி..
சொட்டுச் சொட்டாய் மண்ணில் உறைய
அவர்கள்
அவர்கள் இதயங்களை கிழித்தே
தோளில் போட்டு தூக்கி வந்தனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரென வந்து நின்று
வாழப்படாத எங்கள் வாழ்க்கையை
அவர்களுக்காக
வாடகை பேசினார்கள்

எங்கள் சுவாசங்களை
சில்லறைகளால் விசாரித்து
மறுத்தபோது
எங்கள் சுதந்திரத்தை
சுரண்டிச் சுரண்டி
சப்பித் துப்பினார்கள்

இரகசியமாய்
எம் கனவுகளுக்கு சுவரெழுப்பினார்கள்
உடைத்த போதெல்லாம்
எங்கள் ஆசைகளை
அவர்கள்
அடக்கு முறையில் சவரம் செய்தார்கள்

படித்துக் கொண்டிருந்த
எங்கள் அகராதிகளை
பறித்துக் கொண்டார்கள்
கேட்டபோது
கொஞ்சம் கொஞ்சமாய்
வார்த்தைகளை
எங்களுக்கு
வரையறுத்துப் பிச்சையிட்டார்கள்

எங்கள் பார்வைகளை
அவர்கள்
பலாத்காரமாய் தணிக்கை செய்தார்கள்
எஞ்சிய பார்வைகளை
அவர்களினூடாக பார்க்கச் சொன்னார்கள்



இரவு - பகல்
அந்தி -அழகு
பூமி
எங்கள் உணவு எல்லாம்
அவர்களின் சலுகைகளாய் சொன்னார்கள்

சொல்லி
இரவின் உறக்கத்திற்கும்
பகலின் உழைப்பிற்கும்
அந்தியின் ஓய்வுக்குமாய்
மீண்டும்
வாழப்படாத எங்கள் வாழ்க்கையை
வாடகை பேசினார்கள்

இரத்தமும் இரக்கமும்
இதயத்தை விட்டு வழுக்கி வழுக்கி
சொட்டுச் சொட்டாய் மண்ணில் உறைய
அவர்கள்
அவர்கள் இதயங்களை கிழித்தே
தோளில் போட்டு தூக்கி வந்தனர்

18 ஜூன் 1995 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ மௌனிக்கிறாய் நான் மரணிக்கிறேன்

என் கனவுகளிலாவது
நீ புன்னகைத்துப் போயிருந்தால்
என் கவிதையில்
இத்தனை சோகங்கள்
இருந்திருக்க நியாயமில்லை

உன்னால் உயிர்த்த என் வாலிபம்
உன்னாலேயே
உதிர்ந்துவிடப் போவதிலும்
திருப்தியென்றால் உனக்கு
நீ
உதிர்த்து விட்டே போகலாம்

ஒரு பூந்தோட்டத்திற்காய்
தவமிருந்தேன் உன்னில்!
நீயோ
எறிந்து விட்டுப் போனது
கருகி விழுந்த சருகுகள்தான்







என் வினாக்களுக்கெல்லாம்
பதில்கள் மௌனமா?
சம்மதத்தின் குறியீடு
மௌனங்கள் மட்டும்தானா?
ஆயின்
உன் சம்மதங்கள் எனக்கு
தேவையில்லை இப்போது

வார்த்தைகளை நீ
எங்கேயடி தொலைத்தாய்?
ஊமை பாஷையிலாவது
உன்னால்
உரையாட முடியாதா?

என் அவஸ்தை சொல்லி
நான் அழுவதென்றால்
உன் விழிகளைக் கொஞ்சம்
கடனாகத் தா!


என் கனவுகளிலாவது
நீ புன்னகைத்துப் போயிருந்தால்
என் கவிதையில்
இத்தனை சோகங்கள்
இருந்திருக்க நியாயமில்லை

05 மே 1996 தினகரன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பஞ்ச பூதங்களில்
ஒருவன் நான்
பஞ்சே எனது
முதற் பகைவன்

தீபம் என் புன்னகை
காட்டுத் தீ எனது
கடுங்கோபம்



மனிதர்கள் உங்களைப் போலவே
நானும்
'இரண்டின்'
உரசல்களின் போதுதான்
உற்பத்தியாகிறேன்

பொழிவதில் அழகு மழை போல
அழிவதில் அழகு வானவில் போல
மணப்பதில் அழகு மலர்கள் போல
எனது அழகு எனக்கு அழகு
எரிந்து பின் எரிப்பதில்தான்

ஆதவனே எந்தன்
ஆதி மூலம்
மின் மினி எந்தன்
சுடாத நகல்

பூமியும் நானும்
பிரிய நண்பர்கள்தான்
இடக்கு முடக்காய்
பூமி நடக்கும் போதுதான்
எரிமலையாய் நான்
எரிந்து விழுகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நண்பனே
காதலி தரும் முத்தங்கள்
தகிக்கும் உன் கோபத்தை
தணிப்பது மாதிரி
கொழுந்து விட்டெரியும்
எனது கோபத்தை
தணிப்பதென்னவோ
தண்ணீர்த் துளிகள்தான்

என்றாலும் இறுதியாய்
ஒன்று மட்டும் சொல்வேன்
என்னதான் நான்
சூடானவனென்றாலும்
கொடு மனிதர்கள் சிலரின்
மனங்களின் முன்னால்
என் எரிவெப்பம் என்னவோ
இரண்டாம் பட்சமே!

23 நவம்பர் 1997 தினமுரசு





# ஓர் அகதியின் புலம்பல்

அழுகிச் சிதைந்து
நாறிப் போன பிணத்தினுள்
புழுக்கள் புகுந்து
புதினம் பார்ப்பதாய்
என்னுள் சோகம்

சோகங்களை இறக்கி வைத்து
அழுது பார்க்கவே ஓர் ஆசை
கேவிக் கேவி அழுவதனாலே
அடங்கிப் போகுமா சோகம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை சோகத்திற்குமாய்
எப்படி நான் அழுவது?
அத்தனை துயரையும் அறுத்தெறியும் படியாய்
கண்ணீர்த் துளி கூட கண்வசமில்லையே

என் பாதைகளெல்லாம் பாசி(சம்) படிந்ததால்
வாழ்ந்ததை விடவும்
நான் வீழ்ந்ததே அதிகம்
என் அழுத கதைகள்
அறியும் உன் மனம்
நான் அலைந்த கதைகள்
அறியுமா நின் மனம்?

வேற்று மதத்தவன் என்பதால் எனக்கு
வேறொரு மதத்தவன்
தந்ததிந்த வேதனை
ஆயின்
மதங்கள் என்பது மனிதம் அற்றதா?
வேறொரு வேதம் ஏற்றதால் எனக்கு
வந்தது இந்த வரண்ட வாழ்வு
ஆயின்
வேதங்கள் என்பது வேதனையூற்றா?

வர்ண வர்ணங்களாய்
கனவு கண்ட நெஞ்சுக்கு
இன்னுமிந்த
கவலைகளைச் சுமந்து
தொய்ந்து போக சக்தியில்லை

அதனால்
சோகங்களை இறக்கி வைத்து



அழுது பார்க்கவே ஓர் ஆசை
கேவிக் கேவி அழுவதனாலே
அடங்கிப் போகுமா சோகம்?

பிறந்து புரண்ட என் ஊரை விட்டும்
பிரியமாய் வளர்ந்த
என் உறவை விட்டும்
நான் பிரிந்து போவதே
அவர்களின் பிரியம்
அதனால் இப்போ
பிரிந்து போகவே எனக்கும் பிரியம்

இந்து இஸ்லாம்
பௌத்தம் கிறிஸ்தவம்...
வேதங்கள் விற்றுப்
பிழைக்காதோர் பூமிக்கு
பிரிந்து போகவே
எனக்கும் பிரியம்
அங்காவது கொஞ்சம்
அமைதியாக வாழ்ந்து பார்க்க...!!

அகில இலங்கை ரீதியில் 1999ஆம் ஆண்டு
இளைஞர் விருது பெற்ற கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளை விளக்கு
# சிவப்பு வெளிச்சம்

அவள் வீட்டுக் கதவு
ஒரு சில இரவுகளைப் போல்
விரக தாபத்துடன் தட்டப்பட்டது
மனசை மூடிக்கொண்டு
அவள்
கதவுகளைத் திறந்தாள்

புணர்ச்சி தவிர்ந்த
மற்ற மனித உணர்ச்சிகள்
எல்லாவற்றையும்
எங்கோ தொலைத்துவிட்டு



வெளியில்
ஒரு மனித மிருகம் வழிந்து நின்றது

வறுமையின் சோர்வுகளோடு அவள்
வந்தவனின் முகத்தைப் பார்த்தாள்
வந்தவனோ
சோர்ந்து கிடந்த அவளின்
முந்தானையத்தான் பார்த்தான்

பார்வைகளின் தேடல்களில்
அவன் தேவைகளை உணர்ந்த
அவளின்
வரவா என்ற விசாரிப்பில்
ஒரு வியாபாரம் தெரிந்தது
அவனோ வாடி என்றழைத்ததில்
வாடிக்கையும் தெரிந்தது

அந்த வீடும் அறையும்
அவர்களை
வழமைபோல் வாங்கிக் கொண்டு
அழுது மூடின

உள்ளே
மானின் முனகலாயும்
புலியின் உறுமலையுமாய்..
அவன் 'உடலின்' பசியை
உடற் பசியோடு
அவள்
அவஸ்தைகளாய் தீர்த்துக் கொண்டிருக்க..
கட்டில் கூட மனசு நொந்து
கிரீச் என்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுது கொண்டே கதவுகள்
திறந்து திறந்து மூடின
அவன் அழுக்கோடு சென்றான்
அவள் அழுகையோடு எழுந்தாள்
ராத்திரிப்பொழுது
இப்படி
இரகசியமாய் கழியவே..
பொழுதும் சுளீர் என
அழுதுதான் புலர்ந்திற்று

எல்லாமே கதகதப்பாயிருக்கும்
அந்த மௌனம் கலையாத காலையிலே
அவள் கட்டில் விற்ற காசு
பக்கத்து அறையில்
தொட்டிலில் தூங்கியெழுந்த
அவள் குழந்தையின் வாயில்
புட்டிப் பாலாய்
வழிந்து கொண்டிருந்தது

10 செப்டம்பர் 1995 தினகரன்





# இலக்கு

நட்சத்திரங்களை
நானும்
தினம் தினம் எண்ணுவேன்

நட்சத்திரங்கள் எனைப்பற்றி
என்னதான்
எண்ணினாலும்!

03 நவம்பர் 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் பிரித்த உறவு



இரு[illegible]
ஒரு தாய் தன் குழந்தையை
தாரைவார்த்துக் கொடுப்பதிலும்
கொடுமையாயிருக்கலாம்
நம் பிரிவு

இந்த இழப்பின் மீதான
அவஸ்தைகள் கூட
விழிகளுக்குள் விரல்களால்
கீறும்
கரிப்பினிலும்
கொடுமையாயுமிருக்கலாம்

ஆனாலும் அழாதே
நம் வேதனைகள்
இந்த மண்ணின் காயங்களை விடவும்
கொடுமையில்லை காதலி



உயிர்களால்
தழுவிக் கொள்வோம்
உடல்களால்
பிரிந்து போவோம்
பிரிவு என்பது நமக்கு
நிரந்தரமல்ல பெண்ணே

அகதிகளாய் நம்மை
வழியனுப்பும் கிராமம்
நாளை நிச்சயம்
அதிதிகளாக வரவேற்கும்
அதனால்
இப்போது
நாம் பிரிந்து போவோம்
பிரிவு என்பது நமக்கு
நிரந்தரமல்ல பெண்ணே

நம் பிரிவின்
இடைவெளிகளில்
எங்கோ ஒரு தொலைவினில்
குப்பி விளக்குகளின்
குருட்டு வெளிச்சத்தில் நீயும்
புகைத்தலின் எரிவுகளால்
இருதயத்தைப்
போர்த்திக் கொண்டு நானுமாய்
பழைய நினைவுகளோடு
தாம்பத்யம் நடத்திப் பார்க்கலாம்
அழலாம்
கனவுகளில் கைகோர்த்து
புல்வெளிகளில் புரளலாம்
ஞாபகங்களின் உளைச்சலிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைத்தியமாயும் அலைந்து திரியலாம்
ஆனாலும்
இப்போது நாம் பிரிந்து போவோம்

என் போகுதலின் இலக்கு
புரியவில்லை எனக்கு
ஆயினும்
எங்கோ நீ அடையப் போகின்ற
அந்த அகதி முகாமாவது
உன் புகுதலினால்
நம் நிலைமைகளைப் போலல்லாமல்
புனிதமடையட்டும்

வாழ்வின்
சந்தோசமான ஒரு பகுதியை
இழந்து நிற்கும் நமது
சேர்விற்காய் நீயும்
பிரார்த்தித்துக் கொள்வாயா?
அந்த நிமிடங்களில்
நம் தேசத்தின் அமைதிக்காயும்
கொஞ்சம் பிரார்த்தி



சந்தோசம் வேறு
சமாதானம் வேறல்ல
நம் சந்தோசங்கள்
தொலைந்து கிடப்பது
சமாதானத்தின் மடியினில்தான்

உயிர்களால்
தழுவிக் கொள்வோம்
உடல்களால்
பிரிந்து போவோம்
பிரிவு என்பது நமக்கு
நிரந்தரமல்ல பெண்ணே
மரணமும் கூடத்தான்..!!

13 ஜூலை 1997 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீ நிரம்பிய
# என் உயிர்க் கோப்பை

எது கொண்டுதான் விமர்சிக்கப்பட்டாலும்
நமக்குள்
நீண்டு கொண்டிருக்கும் உறவு
காதலன்றி வேறொன்றாய்
படுவதாயில்லை எனக்கு

விதிதான் இதுவென்று
அவலங்களை கட்டியழும் வாழ்க்கை
அசிங்கப்படுத்துவதாயிடும்
உறவை

புரண்டு போயினும் காதலை
நமக்கான சக்திகொண்டு
உயிரின் கடைசிச் சொட்டு வரை
நிமிர்த்திப் பார்ப்பதுதான்
வெற்றி என்பேன் கண்மணீ



சொல்லாமல் கொள்ளாமல்
விழி உடைத்து வரும் கண்ணீராய்
உன் சிறை உடைக்கும் என் காதல்
அப்போ
என் எழுதுகோலாய் நீயும்
நிமிந்து நிற்கலாம்

தரிசனமில்லாத
தரித்திரப் பொழுதுகள்
சுடுகிறதா உனக்கும்?

வருவேன்
இதுதான் விதியெனினும்
திருத்தி எழுதலாம் என்கின்ற
தீர்மானங்களோடும்
உன் இருட்டை விரட்ட
சில தீப்பந்தங்களோடும்
வருவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டடித்துக் கிடக்கும்
அமாவாசை எனினும்
நிலவை வானம்
தொலைத்து விட்டதாய்
அர்த்தமல்ல அறி!
புதியதொரு நிலா
அங்கு சினைப்படுதல்
அறிவாயா?

வருவேன்
அப்போ
தூர நின்றாவது சிரி!
என்னோடு மட்டும்
ஒரு வெட்கம் கெட்ட
ரோசா மாதிரி!!

01 டிசம்பர் 1996 தினகரன்





# தவிர்க்க முடியாத உணர்வுச் சொட்டு

கனவு வரும்
ஒன்றிரண்டு போக
மற்றெல்லா இரவினிலும்
எனக்குள்ளும் கனவு வரும்

நெடிதாய் சிலதும்
புள்ளிகளாய் சிலதும்
நறுக்குத் தெறித்தாற் போல்
சிலதுமாய்
எனக்குள்ளும் கனவு வரும்

பல நேரம் வாழும்
சில கனவு என்னுள்
பல கனவு என்னுள்
சில நேரமே வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழட்டுக் கனவுகளும்
சில வேளை வரும்
வந்ததுமே பாய் விரித்து
என்னுள்ளே உறங்கிப் போகும்

பாம்பாய் வரும் சில கனவு
பூவாய் வரும் சில கனவு
முகமெல்லாம் கருகிப் போய்
முடமாய் வரும் வேறோர் கனவு
எப்படியோ
எனக்குள்ளும் கனவு வரும்

மனசுக்குள் வந்து
மலங் கழித்துப் போனது
நேற்றிரவு ஒரு கனவு
உடம்பெல்லாம் பல்லாக
ஒரு கனவு வந்து
என் உச்சி உறுஞ்சி
மூளை குடித்து
அதிகாலைப் பொழுதினிலே
தத்துவம் சொல்லியது

வடிவான கனவுகளும் வராமலில்லை
ஒரு பொழுது
ஒரு பெண் கனவு
இரவெல்லாம் என்னோடு
படுத்துக் கிடந்து
விடி காலை விடை பெற்று
போனதுவுமுண்டு

நெருப்பாய்
கறுப்பாய்
கழுத்தில் வாலும்



இடுப்பில் கொம்பும் முளைத்த
பொக்கை வாய் கிழவியாய்
பேயாய் ரத்தமாய்
பெயர் தெரியாத இன்னுமாய்
எனக்குள்ளும் ஏதேதோ
கனவு வரும்

அதிசயமாய்
குரோதங் கொண்டு உயிர் குதற
சில கனவு எனை விரட்டும்
ஓடி வரும்

விரட்டுகின்ற கனவுக்கு
பயந்ததில்லை மனசு
எக்கனவு எதற்காக
எனை நோக்கி வந்தாலும்
குதித்தெழுந்து நான் விழிக்க
முனகிச் சாகும் கனவு!

16 மே 1997 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாளையும் தேசமும் உயிர்த்தெழும் துயரங்களும்

மிக நூதனப் பொழுதொன்றில்
என் மனதினுள் நான் நுழைந்தேன்
மனசின் இருள் படிந்த
மெல்லிய திரைகளென்னுள்ளாடின
இடுக்குகளுள் விழி செலுத்தி
பார்வைகளால் மேய்ந்தேன்

மனமெங்கும் புற்று
சொட்டுச் சொட்டாய் எதுவெதுவோ
ஆசை குரோதம் துயர்களென்று
சேர்த்துச் சேர்த்து வடித்த புற்று
மனசின் திரைகள் என்னுள்ளாடின
கோபப்பாம்பு புற்றிலிருந்து
சீறிச் சினந்து விஷம் கொட்டிற்று



கருணை மரமெல்லாம்
இலையுதிர்த்து நின்றன
எங்கு பார்ப்பினும்
மனசெல்லாம் சருகுகள்
எட்டு வைத்து நடந்தேன்....
சருகெல்லாம் வெறியோடு
சரசரத்திரைந்தன

மனதுள் நான்
வழிதேடி நடந்தேன்
நடக்க நடக்க
பிணங்கள் நாறின
பேய்கள் கூவின

அழுதேன்
மனதுள் விழுந்து ஓலமிட்டு
ஓடியோடி
காடு பிடித்துப்போன
மனப் பரப்பின் கோர முட்களில்
கிழியுண்டழுதேன்

எங்கனமகற்ற நான்
என் மனசெங்கும் பரவிப்போன
புற்றை முட்களை பாம்பை
காடுகளை பிணங்களை பேயை
எங்கனமகற்ற நான்?

கணங்களில் தொற்றிக் கொண்ட
வேக வெறியோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மனசின் குப்பைகளை
கோரிக் குவித்து
புற்றுக்களையிடித்தேன்
முட்களை செதுக்கி
ஆழங்களில் புதைத்தேன்
படம் விரித்தாடிய பாம்பை
தீயில் ஏறிய; காடு பற்றிற்று

மனசுள்ளே எல்லாம்
எரிந்திற்ற பின்னால்
சோர்வோடு விழுந்தேன்
என்றுமேயினி மனம் பாழடையாது
காடு பிடியாதென்கிற
நம்பிக்கைகளோடு
மெல்லிய திரை விலக்கி
மனது விட்டு
குதித்தேன் நான்

பிறிதொரு பின்னிரவில்
தக தகக்கும் நிலாவொளியில்
மனசுள் நுழைந்தபோது
காடெரித்த சாம்பலை
கிளறிப்பார்த்தேன்
எரிந்தும் எரியாமல்
அரை வேக்காடாய்
சாம்பலினுள்ளிருந்து
கூவியெழுந்தது
பாம்பொன்றும் பேயொன்றுமாய்!

21 ஜீன் 1998 வீரகேசரி





## அமைதி என்று ஓது

நாம் ஒருவருக்குள் ஒருவரை
புதைத்துக்கொண்ட இந்த இரவு
நாளை நமக்கு இல்லாமல் போகலாம்
அன்பானவளே
நானும் கூட இல்லாமல் போகலாம்

ஒரு கொலை வெறியனின்
துப்பாக்கி எச்சத்தாலோ
மனிதத்தைத் தொலைத்த ஒருவனின்
மரண கருவியாலோ
என் உயிரும் உதிரமும்
உறிஞ்சப்பட்டு
நான் இல்லாமல் போகலாம்
நாளை
இந்த இரவும் நமக்கு
இல்லாமல் போகலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மென்மையான கனவுகளோடு
என் மார்பு மீது தலை சாய்த்து
உறங்கும் உன்னை
நாளை
இந்தக் கொடிய சமூகம்
ஒரு வெள்ளைப் புடவையால்
விழிப்புக் காட்ட..
நான் இல்லாமல் போகலாம்

இப்போதின்
ஒரு நாள் பிரிவுகளுக்கே
உயிர் உருக அழுகிறாயே
அப்போ
உன் தாலி இறங்கும்
எப்படி தாங்குவாய்?
இந்தக் கோர யுத்தத்தின்
கொடிய இழப்புகளுக்கு
உன்னையும் கொஞ்சம்
பழக்கிக் கொள் கண்மணி

நீ வயிற்றில் சுமக்கும்
நம் மகனோ மகளோ
நாளை ஒருநாள்
தன் தந்தையின் தரிசனமின்றியே
இத் தரையை முத்தமிடலாம்
அப்போ
நம் செல்வத்தை முத்தமிட்டு
நம் குழந்தையின் செவிகளில்
மெதுவாக ஓது
அமைதி...அமைதி
அமைதி..என்று..!

25 ஜூன் 1995 தினகரன்





# வராமற் போனவள்

நீ சந்திக்க வராத
அந்தக் கறுப்பு அந்திகளில்
மனசு சோம்பலாய்
வெறுமையோடு முனகும்

ஆயினும் வழமை போல்
உன் சின்னத் தெருவின்
கிறவல் சிவப்பு
மௌனமாய் என்னோடு
சிரித்துக் கொள்ளும்
யாராரோ வருவர் யாராரோ போவர்..
ஆனாலும் நீ வரவே மாட்டாய்

மனசு சோம்பலாய்
வெறுமையோடு முனகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியிலிருந்தே
என் விழிகள் பார்வையை
உன் வீட்டிற்குள் எறியும்
காகம் குந்திய குரோட்டன் அசைவில்
மனசு உந்தன் வரவு தேடும்
ஒரு நேர்த்தியான கவிதைக்கென
தவமிருக்கும் இரவுகளாய்
உனக்காக காத்திருக்கும்
அந்த அவஸ்தைகளில்
என் உயிர் உமியும்

விழிகள் நோக.. நெஞ்சு கடுக்கும்
காத்துக் காத்து அந்தி கரையும்
ஆயினும்
ஒரு மூட நம்பிக்கையில்
மனசு
உந்தன் வரவு நோக்க
போ போ என்று
உன் முற்றத்து மாமரம்
பச்சிலை அசைக்கும்

திரும்பி போக திரும்பும் போது
இருளும் நாயும் தெருவை பிடிக்கும்

அப்போதும்
உன் சின்னத் தெருவின்
கிறவல் சிவப்பு
மௌனமாய் என்னோடு
சிரித்துக் கொள்ளும்

04 ஜனவரி 1996 தினமுரசு





# காலவழு

இது உங்களுக்கான நேரம்
ஆடலாம் பாடலாம்
ஆடைகளைக் கழற்றி விட்டு
ஆகாயத்தில் நீங்கள்
கும்மியடித்துப் பார்க்கலாம்
எல்லாமே செய்யலாம்
இது உங்களுக்கான நேரம்

மண்ணைக்காட்டி
பொன்னென்கலாம்
முடிகளை அள்ளிக்குவித்து
அதை
மலையென்கலாம்
மறுக்கவே மாட்டோம்
மௌனிப்பதைத் தவிர
ஏனெனில்
இது உங்களுக்கான நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களின் ஆகாரங்களை
நீங்கள் நிறுத்தலாம்
எங்களுக்கான சுவாசங்களை
நீங்களே நிர்ணயிக்கலாம்
உங்கள் அனுமதியின்றி
எங்கள் மனைவிகளோடு
புணர்வதைக் கூட
உங்கள் சட்டத்தால்
நீங்கள்
தடை செய்து பார்க்கலாம்

அப்போதும்
ஒரு நோன்பாளியின்
பொறுமை கொண்டு
நாங்கள்
மௌனம் காப்போம்
ஏனென்றால்
இது உங்களுக்கான நேரம்

நீங்கள்
ஆடலாம் பாடலாம்
ஆடிக்கொண்டும் பாடலாம்
பாடிக்கொண்டும் ஆடலாம்
எல்லாமே செய்யலாம்
இது உங்களுக்கான நேரம்




உங்களின் நாய்கள்
உரத்துக் குரைத்தால்
சலாம் போடுவோம்
உங்கள் புழுக்கள்
சீறி எழுந்தால் மண்டியிடுவோம்
உங்களின் ஓணான் பல்லி ஆமை
நண்டு
கரப்பான்
எது வந்தாலும் எழுந்து நிற்போம்
எல்லாமே செய்வோம்

ஞாபகம் வைத்திருங்கள்
இதுவெல்லாம்
எங்களுக்கானதொரு நேரம்
வரும்வரை மட்டும்

13 ஜூலை 1997 தினமுரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காத்து

கல்லாதவர் மனசு போல
ரொம்ப பொல்லாதது
இந்த காத்து

'சோ' வென அடித்து
ஊர்க் குப்பைகளை
வாசலில் சேர்த்து விட்டு
உம்மா ஏச
'ஊ' என ஓடிப்போகும் காத்து.

முக்கி மிதித்து
முன்னேறும் சைக்கிளினை
தள்ளி நிறுத்தி விட்டு
தள்ளி நின்றிளிக்கும் எதிர்க் காத்து
கல்லாதவர் மனசு போல
ரொம்ப பொல்லாதது இந்தக் காத்து

என் முற்றத்து முருங்கையினை
நேற்று
இடுப்படியால் முறித்து விட்டு
தெத்திக் தெத்தி போனதிந்த
தறி கெட்ட காத்துத்தான்



காத்து காத்து
பார்த்து
இடிக்கத் தெரியாத காத்து
இது
கொடுமைக்கார காத்து

புழுதி கிளப்பி
பேய் போல சுழன்று
மாமரத்து மைனாவின்
கூடு பிரித்தெறிந்து விட்டு
அடங்காமல் திரியுதிந்த
அடாவடிக் காத்து

போதாக் குறைக்கு
என்னவள் மேலாடையை
சரிப்பதும்
தாவணியை இழுப்பதுமாய்
தத்தாரிக் காத்து

09 மார்ச் 1997 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காற்றுச் சுடும்
விழிகளோடு முரண் பட்டு
தூக்கம் வெளிநடப்புச் செய்யும்

உன் கடித வரிகளை
மேய்ந்து மேய்ந்தே
ஆயுளில் பாதி தேய்ந்து போகும்

நீயில்லையென்றால்
என் கவிதைகளெல்லாம்
அப்போ
இறந்தே பிறக்கும்

பசியை துக்கமும்
சந்தோஷங்களை தனிமையும்
துரத்திக் கொண்டேயிருக்கும்



உன் சிரிப்புக்களை
கனவுகளாய் சேமித்து வைத்த
இதயம்
அதை கண்ணீர் பூக்களாய்
செலவு செய்யும்

சந்தோஷம் என்பது - அப்போ
என் கடந்து போன
பக்கங்களில் மட்டுமே
எழுதப்பட்டிருக்கும்

வாழ்க்கை
உன் நினைவுகளாய் இருக்கும்
நெஞ்சு,
நினைவுகளோடு மட்டுமே
குடும்பம் நடத்திப் பார்க்கும்

நிலா கூட
ஒளியை
என்னை தவிர்த்து
பொழிவதாகவே படும் எனக்கு

ஜீவிதம் தூரமாகும்
இறப்பு மட்டும்
என்னை
சில இமைத்துடிப்பின் இடைவெளிகளில்
காத்துக்கிடக்கும்

நீயில்லையென்றால்
அறிவு
இரண்டும் இரண்டும் ஆறு என்று
தப்புத் தப்பாய் கணக்குப் போடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் கீழிறங்கும்
ஆணலை பெண்ணலையை
விரட்டிப்பிடிக்கும்
ஒளியிழந்த சூரியன்
விறகடுப்பில் குளிர்காயும்

இன்னும்
எதுவெதுவோ நடந்து போகும்..
நீயில்லையென்றால்

14 பெப்ரவரி 1997 தினமுரசு





சுவரில் பல்லி
அருகே பூச்சி


நகர்ந்து நகர்ந்து
பல்லி
நகர்ந்து பதுங்கி
மெல்ல
பதுங்கி நகர்ந்து
பாய்ந்து கவ்வ....

சுளீரென உயிரெல்லாம்
திடீரென்று வலி கொண்டு
கட்டிலில் வீழ்ந்தேன்
நான்
கடிபட்ட பூச்சியாய்!!

10 பெப்ரவரி 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உயிரைக் கையில்
பிடித்துக் கொண்டு
விழிக்க வேண்டிக் கிடக்கு
இந்த ராவுகளில்

எங்கள் உயிர்கள்
எந்தக் கணத்திலும்
பிடுங்கப் படலாமென்று
எமக்குள் இப்போ
ஏராளமாய் பயம்

இரவின் நிசப்தத்தில்
பனம் பழத்தின் 'தொப்' கூட
எனக்குள் வெடி குண்டாய்!



நாய் வாழ்க்கை
இல்லையில்லை
இப்போதெல்லாம்
நம்மை விட சுதந்திரம்
நாய்களுக்கு அதிகம்

இரவு
சுருங்கக் கூடாதா?
அன்றி
நான் இறக்கக் கூடாதா?

எனக்கிந்த வாழ்வில் விருப்பமேயில்லை
இழுத்த மூச்சை விடுவதற்குள்
இறப்பைப் பற்றியும்
எண்ண வேண்டி கிடக்கிறதால்
எனக்கிந்த வாழ்வில் விருப்பமேயில்லை

மரணம் இப்போ
அதறப் பதற
துப்பாக்கிகளினால் எமக்குள்
திணிக்கப்படுகிறது

கொலைகள்
என்ன
இலவசமா

ஆந்தைபோல் விழித்து
பயந்து செத்து
நண்டு போல் பதுங்கி
இந்த வாழ்க்கையில் இரசிப்பதற்கு
இனி ஒன்றுமேயில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்
இறப்பின் மீது இஷ்டம்தான்
இதயம் தொலைத்த ஒருவனின்
இரும்புக் குழல் ஊட்டாத
மரணம் கொண்டு வீழ்வதென்றால்
இஷ்டம்தான்
இறப்பின் மீது
இப்போதும்

கவிதைச் சரம்

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காயப்பட்ட வாழ்க்கையும் மயிலிறகு வார்த்தைகளும்



வாழ்க்கை அழைக்கிறது
நீயோ
இறந்த காலங்களிலேயே
இன்னும் இருக்கிறாய்

எல்லோர் கண்களிலும்
கலர் கலராய் கனவுகள்
நீயோ
பழைய
கறுப்பு வெள்ளை கனவுகளுக்குள்ளே
பதுங்கிக் கொண்டிருக்கிறாய்



தீ சுட்ட புண்களாய்
ஏன் உன் கண்கள்
காணுகின்ற நேரமெல்லாம்
கண்ணீரையே வடிக்கின்றன?
அழாதே
வாழ்க்கை
அழுகையின் மொழிபெயர்ப்பல்ல

ஒரேயொரு
காகிதப்பூவின் இழப்பிற்காய்
கலங்கிப் போய் கிடப்பவளே
ஓராயிரம் நந்தவனங்கள்
உன் பெயர் சொல்லி அழைக்கிறதே
உணரவில்லையா நீ?

இழத்தல் என்பதெல்லாம்
இழப்பு அல்ல பெண்ணே
விதை,
உறைகளை இழக்காமல்
முளை,
மரமாவது எப்படி?
ஆயின்
மரத்திற்கு விதை உறை
இழப்பென்று ஆகுமா?
இழத்தல் என்பதெல்லாம்
இழப்பு அல்ல அறி

நீ இழந்தது என்னவோ
சிறு மின் மினிப் பூச்சிதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்
சூரியனே தொலைந்ததாய்
ஏன்
சுருண்டு போய் கிடக்கிறாய்?


வாழ்க்கை அழைக்கிறது
சொல் பெண்ணே
இறந்த காலங்களிலேதான் நீ
இன்னும் வசிக்கப் போகிறாயா?
பழைய
கறுப்பு வெள்ளை கனவுகளுள்தான்
காலங்கரைக்கப் போகிறாயா?

மறக்க வேண்டியவை எல்லாமே மற!
உன் துறவு வாழ்க்கையை
கொஞ்சமேனும் துற!
புழுதி படிந்த விலங்குடைத்து
உயரவானில் பற!
அப்போது
பூமியிலும் அழகானதாய்
உன் விழிகள் வேறொன்றும் தரிசிக்கா

புழுங்கும் நினைவுதறி
உன் கோடுகளுக்கு வெளியே வா
அப்போ
எந்த மனிதரிலும் அன்பு வைப்பதுதான்
பாவங்களை போக்க
முதல் வழியென்று அறிவாய் நீ

24 ஒக்டோபர் 1997 தினமுரசு





# தடை செய்யப்பட்ட கவிதை

எச்சில் இலை
உலர்ந்து போன மலர்க் கொத்து
காலங் கடந்த நாட்காட்டி
இவைகளோடு சேர்த்து
என் கவிதைகளையும்
கிழித்து எறி

எந்த விழிகளின் தரிசனத்திற்காய்
இன்னும் நான் எழுதுகிறேனோ
அவைகளின் பார்வைகளிலிருந்தும்
என் கவிதைகளைத் தடை செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தானிய வசனங்களாய்
என் வரிகளையும் பிரகடனப்படுத்து
இரக்கமேயில்லாத
ஒரு மலட்டு சர்வதிகாரியாய்
என் கவிதைக் குழந்தையின்
குரல் நெரித்து குப்பையில் வீசு

ஆயினும்
என் உணவுர்களின் ஊற்று
சுரந்து கொண்டேயிருக்கும்
சிறு நத்தை நீ நீரிறைத்து
என் நதியொன்றும் வரண்டு போகா

கவி கொல்லும் கல் நெஞ்சே
கோரப் பல் முளைத்த
உன் விரல் இடுக்குகளில்
குதறப்படும்
ஒவ்வொரு கவிதையும்
உயிரொன்று வலி கொண்டு
ஒரு பிரசவப் பெண் மாதிரி
பெற்றெடுத்த உயிரென்று
அறியுமா உன் மனம்?

என் கவிதைகளைக் கிழித்தாலும்
அதன் குரல் நெரித்தாலும்
சாத்தானிய வசனங்களாய்
பிரகடனம் நீ செய்தாலும்
பொறுத்துக் கொள்வேன்



நீ கிழித்த கவிதைகளை
என் நேசப் பைங்கிளி
தன் பூப்போட்ட தாவணிக்குள்
பதுக்கி வைப்பாள் அறிவாயா?
பறவையொன்று தன் இறக்கைக்குள்
அடை காக்கும் முட்டைகளாய்
அவள் நெஞ்சச் சூட்டினிலே
பதுக்கி வைத்த என் கவிதை
பல குஞ்சு
பொரிக்கும் நாளை


அதனால்
பொறுத்துக் கொள்வேன்
கவி கொல்லும் கல் நெஞ்சே
பொல்லாத உன் தடையை!

01 மே 1998 தினமுரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கடல் துயரம்



யாருண்டு
இன்றின் என் துயரங்களை
ஒரு பாடல் கொண்டு
அன்றி
ஒரு பருக்கையளவேனும்
பிராத்தனைத் துளி கொண்டு
துடைத்துவிட யாருண்டு இங்கு?

சிறு கணமும் நிதானியாது
கருணையின்றி ஓர் உயிர் கொய்த
துயரத்தின் உறுத்தலில்
தீய்க்கிறது நெஞ்சு



நெளிந்து சுருண்டு
சாம்பலிட்ட மண் புழுவாய்
மனதுள் துடித்தழுது
இரவுகளை விழுங்கி ஏப்பமிட்ட
அத்துயரங்களின் செறிவில்
என் உயிரும் ஒரு கணம்
சிதறியதும் மெய்தான்

நெருப்பில் பொசுக்கி
நார் நாராய்க் கிழித்துண்ண
ருசிதான் புறாக்கறி
அதன் சோடி வந்து
முக்கி முனகி
ஒற்றைக் காலில் தவமிருந்து
அழுது
திட்டித் தீர்க்கும் வரை
மிக மிக ருசிதான்
புறாக்கறி எனக்கும்

இனி
எந்தத் தீக்கிடங்கில்
விழுவேனோ நான்?
நார் நாராய் நான் கிழிய
எந்த விலங்கு
ருசிக்குமோ என்னை?
ஓர் இணை பிரித்த கொடுமைக்காய்
எத்தனையாவது நரகத்தில்
தொங்குமோ எனது பெயர்?
அன்றி
பெண் துணையின்றி
பெண் சுகமின்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பித்தனாய் கிறுக்கனாய்
குடு குடுத்தலைந்து...
நினைக்க நினைக்க
என் உயிரும் ஒரு கணம்
சிதறியதும் மெய்தான்

நெளிந்து சுரண்டு
சாம்பலிட்ட மண் புழுவாய்
மனதுள் துடித்தழுது....
ஓ!
ருசிதானெனக்குமந்த ஒற்றைப் புறாக்கறி
அதன் சோடி வந்து
முக்கி முனகி
ஒற்றைக் காலில் தவமிருந்து
திட்டித் தீர்க்கும் வரை

எது செய்வேன் இனி
குருதி படிந்து பிணம் செரித்த
என் புறத்தையும் அகத்தையும்
எந்தப் புனித நீர் கொண்டு
பரிசுத்தம் செய்வேன் நான்?

வா மயிலே வா!
துயர் மறந்து நானுறங்க
ஒரு தாலாட்டு பாடு வந்து
கனவில்,
நான் பொசுக்கியுண்ட மணிப் புறாவின்
இணை வந்து குந்தி
எந்தன் விழி கொத்தியுண்ணட்டும்



பின்னும்
இலையுதிர்த்த மரமொன்றில்
அவ்விணை வந்து குந்தி
முக்கி முனகி
ஒற்றைக் காலில் தவமிருந்து
திட்டித் தீர்க்கட்டும்
மீண்டும்
என் பெண்ணை நான் பிரியவும்
அதன் இணை பிரித்து
உயிர் ருசித்த என்னையும்தான்
நிஜமாகவேனும்!

அப்போதெனினும்
தீர்த்து போகுமா இத்துயர்?
எனக்கும்,
அதற்கும்தான்

13 டிசம்பர் 1998 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று தேர்தல்
# சில கோடை ஒரு மரணம்



ஐப்பசிக் காற்று
பழுத்துதிரும் உன்னிறத்து
அந்த மஞ்சமுணா இலை
இன்றின் பௌர்ணமி
எல்லாமுரசயெனை
மனம்
நினைத்திற்று உன்னை

நேற்றுப் போல்தானிருக்கும்
அப்பிரிவு
ஒரு வறுமையின் இம்சையை
உயிருக்குள் உணர்த்திற்று

இது துயரமில்லை
துக்கமில்லை
அவஸ்தைகூட இல்லை
ஆயினுமேதோ



வாடி வரட்சித்து
புழுதி கிளப்பிற்று நெஞ்சுள்

இனி
உனைப் பார்த்தால் தூறும்
என் உயிர்க் கூட்டுள் மழை
மீண்டும்
அருவிகள் சலசலக்கும்
தாமரை இதழ் விரிக்கும்
ஆமாமினி
எல்லாமே என் நதியில்
மூழ்கி மூழ்கி சந்தோசிக்கும்

ஆனால்
நீ வருவதாயில்லை


நீ வரமில்லை சுவர்க்கமில்லை
ஆக
தவங்களென்பதும் என்னிடமில்லை
ஒரு வசந்தம் போலவே
உன் வரவு பார்க்கிறேன்
ஆயினும் நீ வரவேயில்லை

பார்த்துப் பிரிந்து
பிரியும் முன் பார்த்து
எத்தனை வருடங்கள்
ஆயிற்று பெண்ணே!?

28 பெப்ரவரி 1998 தினமுரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவஸ்த்தையான ராவுகளில்

ஆவிகள் மட்டும்
அலைந்து திரியும்
நள்ளிரவில்
என்னோடு சேர்ந்து
சில நுளம்புகளும் விழித்திருக்கும்

சில்லூரின் ராகத்தில்
காதுக்குள் புல்லரிக்கும்
பழைய நினைவுகளின் சோகத்தில்
மனசெல்லாம் எரிக்கும்

பதிந்து போன உன் ஞாபகங்களை
மனம்
மீட்டி மீட்டிப் படிக்கும்
பதித்துப் போன உன் முத்தங்களை
உயிர்
மீண்டும் மீண்டும் நினைக்கும்



இதயத்தின் அவஸ்தைகள்
புகைத்தலால் கழியவே....
இரவின் நிமிடங்கள்
கண்ணீரோடு கரையும்

தூக்கம் கலைந்த கோழிகள்
தூரத்தே கூவும்
உன்னை இழந்த
என் உயிர் அணுக்கள்
சொட்டுச் சொட்டாய் சாகும்

இரவின் முடிவினிலே
அப்பப்போ தூக்கம் வரும்
தூங்கும் பொழுதினிலும்
கண் நிறையக் கனவு வரும்

கனவினிலும் கை நிறைய
பூக்களோடு நீ வருவாய்
கூரிதழால் உயிரெல்லாம்
ஓவியங்கள் நீ வரைவாய்
என்னில் கரைவாய்
என்று...
கண் நிறைய
எனக்கு
கனவுகளே தொடர்ந்து வரும்

அப்போ
பக்கத்தில் துப்பாக்கி
வெடியோசை கேட்கும்
அதில் நித்திரையும் கனவுகளும்
நம் காதல் போல கலைந்து போகும்

14 ஜனவரி 1996 தினகரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இருட்டு

வெளிச்சக் கணவனை
விரோதித்து விட்டு
இரவுக் காதலனை கண்டு
கதைபேச வந்தாள்
கறுப்பு அழகி

23 ஜனவரி 1994 மித்திரன்



## மழை

மேக யுத்தத்தில்
காயப்பட்டு
பூமிக்கு வந்த
அகதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## பரிணாம வீழ்ச்சி

முதலில் நான் தாவுகிறேன்
பின்னால் நீ தாவு
தாவுதலென்பதொன்றும்
நமக்கு புதிதல்லவே
நம் மூத்த குடிகள் யார்
குரங்குகளல்லவா?
அதனால் தான் சொல்லுகிறேன்
முதலில் நான் தாவுகிறேன்
பின்னால் நீ தாவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை வாலென நிமிர்த்தி
கைகளை நீட்டிக் கொண்டு
குய்யெனச் சப்தமிட்டே
நான் தாவுகிறேன்
என்னைப் போலவே நீயும் தாவு
தாவுதலில் சிலவேளை
தடம்புரண்டால்
தாமதிக்காதே
அகப்படும் வேறொன்றின்
தலையிலேனும் காலூன்றி
மீண்டும் தாவு

குதித்து கரணமிட்டு
இன்றிலிருந்து நேற்றை நோக்கி
அன்றி
விழுதிலிருந்து கிளைகளை நோக்கியேனும்
எப்படியோ..

எட்டாத கனிகளை விட்டு நீ தாவு
அதோ
ஆதாமின் ஆப்பிள் விருட்சம்
சுவர்க்கத்து கனியே என்று
துதி பாடித் தாவு
உன் தாவுதலின் வேகம் கண்டு
காற்றும் வியப்புடன்
கை தட்டட்டும்



தோட்டக்காரன் வருகிறானா
தொந்தரவு அது தொந்தரவு
இனியென்ன
ஆதாமின் ஆப்பிளும்
புளிக்குமே உனக்கு
ஆக புளிக்கின்ற கனி விடுத்து
மீண்டும் முதலில் நான் தாவுகிறேன்
பின்னால் நீ தாவு

மரம் விட்டு மரம் தாவு
நிறம் விட்டு நிறம் தாவு
எண்ணங்கள் மாற மாற
சின்னங்கள் விட்டுத் தாவு
சுகமெனில்
பள்ளமேகும் வெள்ளம் போல
ஆறாவதறிவு விட்டு
ஐந்து நோக்கித் தாவு

நம் உடலெனும் கூடு விட்டு
உயிர் தாவும் வரைக்கும்
முதலில் நான் தாவுகிறேன்
பின்னால் நீ தாவு
தாவாமலிப்பதென்றால்
தாங்காது எனக்கு

07 மே 1999 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உன் புன்னகையின் ஞாபகங்களில்
இந்த
சிலுவையினைச் சுமந்து வந்தேன்
காதலி
நீ இன்னுமா தூரம்?

ராவுகளைப் போல
பகல்களும் இப்போ
எனக்குள் கறுப்பாகத்தான்
கரைந்து போகிறது
என் சீதையே
நீ
எந்த தீவில் இருக்கிறாய்?



இருவரும் பார்த்துக்கொண்ட
இனிமையான பொழுதுகளில்
இதயங்களைகளைத் தொலைத்தோமே
இப்போ
இருவருமே பார்த்துக் கொள்ளாமல்
பிரிவுகளாலா சிதைந்து போனோம்?

தெரியுமா?
உன் ஞாபக அலைகள்
இன்னும் எனக்குள்
நுரைக்க நுரைக்க
அடித்துக் கொண்டேயிருக்கிறது
எப்படியிருக்கிறாய்?
ஓர் ஆறுதலுக்காக
உன் சுகத்தையாவது
சொல்லியனுப்பேன்
அஞ்சலில் வேண்டாம்
ஓர் அனுமாரிடமாவது

பூஜைக் கனவுகளோடு
பூத்துக் கொண்ட நம் மலர்கள்
இறுதியாய்
சவப் பெட்டியின் மேலா
சாத்தப்படுவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாம்
காதல் மீது பிரிவுக்கு
அப்படியொன்றும்
பிரிக்க முடியாத காதலில்லை
நம் உறவுகொண்டு
இந்தப் பிரிவுதனை
உடைத்து எறி கண்மணி

காதலர்கள்
செத்துச் செத்து
காவியங்கள் படைத்தது போதும்
வா காதலி
இனியாவது
வாழ்ந்து கொண்டே காதலுக்காய்
ஒரு வரலாறு
படைத்துப் பார்ப்போம்!

09 மார்ச் 1997 தினகரன்





ஒரு கனவு கண்டேன்
அதில்
எரிந்தும் அழிந்தும்
அழுகியும் சிதைந்துமாய்
ஒரு தேசம் முழுக்க
மனிதர்கள் முற்றாய்
மரணித்துக் கிடந்தார்கள்

அப்போ
வெறிபிடித்த
மனிதனில்லாத அங்கு
விலங்குகளின் ஆட்சி
மிக நூதனமாய்
மிருகாபிமானத்தோடு
நடந்து கொண்டிருந்தது

ஆயுதங்கள் எல்லாம்
அனாதையாகிக் கிடந்தன
புறாக்களும் மைனாக்களுமாய்
துருப்பிடித்துப் போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பீரங்கிக் குழாய்களுக்குள்
கூடு கட்டி
குஞ்சும் குடித்தனமுமாய்
கொஞ்சிக் குலாவின

சிங்கமும் பூனையும்
முயலும் எலிகளுமாய்
பள்ளிகளுக்கு
படிக்கச் சென்றன..!
அங்கு
அவைகளின் அகராதிகளில்
மனிதன் என்ற
பதத்திற்கு எதிரே
கொடூர மிருகம் என
குறிக்கப்பட்டிருந்தது..!

இன்னுமாய்
ஒரு அந்திப் பொழுதினில்
மிருக பாஷை கொண்டு
அச்சடிக்கப்பட்ட
மாண்டு போன
மனிதனின் கதைகள்
'மடையர்கள்' என்ற தலைப்பிடப்பட்டு
வேகமாக விற்றுத் தீர்ந்தன



மனிதனைக் காட்டச் சொல்லி
சில விலங்குக் குஞ்சுகள்
பூமியில் கால் உதைத்து
தங்கள் தாய்களிடம் அழுது புரண்டன..!
அழுத குஞ்சுகளின் ஆசை தீர்க்கவே
அவைகள்
அரும் பொருட்சாலைக்கு
அழைத்து வரப்பட்டன

மொத்தத்தில்
அந்த
மிருக ராஜ்யம்
கொடூரமான
இரவுகள் இல்லாமலும்
குண்டுகள் போடும்
விமானங்கள் இல்லாமலும்
கொலைகள் இல்லாமலும்
ம(னித)ரண ஓசை
அறவே இல்லாமலுமாய்
ஆழ்ந்த அமைதியிலிருக்க..

திடீரென
கனவு கலைந்தது..!
விழித்தேன்..
கையில்
நான் எழுதிய
என் கவிதை வரிகள்
ஒரு யுத்தத்தின் பின்னால்..!

30 ஜூலை 1995 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# காத்திருப்

அழுகைதான் உன
ஆசுவாசமென்றால்
அதை
எனக்கும் கொஞ்சம்
சொல்லியனுப்பு தோழி

சேர்வோம் என்கிற
நம்பிக்கைகளில்
காத்திருப்பதைத் தவிர
வேறு ஆறுதல்களில்லை எனக்கு

எனது கனவுகளெல்லாம்
பூப்பெய்தாமலேயே
உதிர்ந்து போயின
நம்மில் மகரந்தமில்லாத
இந்த இடைவெளிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு
நெருப்பாலானதா?
என் ஆத்மம் வரைக்கும்
எரிகிறதே காதலி

இரவுகளிலும்
மனக்குழந்தை
என்னுள்
விழித்துக் கொண்டேயிருக்கிறது
உன் நினைவுகளைப் போல

ஆயினும்
சுழித்தோடும் நதி
எங்கு சுற்றிப் போயினும்
கடலோடுதானே கலந்து போகிறது
அதுபோல நாமும்.....

சேர்வோம் என்கிற
நம்பிக்கைகளில்
காத்திருப்பதைத் தவிர
வேறு
ஆறுதல்களில்லை எனக்கு

10 ஏப்ரல் 1997 தினமுரசு






சுய அறிமுகம் செய்து கொண்டே
மனித குமாரர் வந்தார்

எங்கள் மேய்ப்பராய்
அவரை உணர்த்தினார்
மறுத்தோம்
நீண்டதோர் பிரசங்கம் நிகழ்த்தி பின்
விழித்தார்
நாங்கள் மந்தைகளானோம்

மேய்ப்பர் தடியெடுத்தார்
நாங்கள்
தடியின் வழி அடியெடுத்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய்ப்பர் புதிய வேதம் சொன்னார்
மேய்ப்பர் புதிய முறைகள் சொன்னார்
மேய்ப்பர் புதிய வழிகள் சொன்னார்
பசித்ததோ இல்லையோ
மேய்ப்பரின் திருப்திக்காக
நாங்கள் மேய்த்தோம்

நாளாக நாளாக நாங்கள்
நலங்கெடுவதாயுணர்ந்தோம்
புலன்களுக்குத் தெரியாத எதனாலோ
எங்கள் உரோமங்கள்
பிடுங்கப் படுவதாயறிந்தோம்
எங்கள் சேய்களுக்குக் கூட
சொட்டுமில்லாமல்
முலைகளிலிருந்து பால்
சுரண்டப் படுவதாயுணர்ந்தோம்
எங்கள் கூட்டத்தில்
ஏராள வீழ்ச்சி கண்டோம்
அதிர்ந்தோம்

எங்கள் மேய்ப்பர் எங்கே?
எங்கள் மேய்ப்பர் எங்கே?
மேய்ப்பரைக் காண ஓடிய நாங்கள்
உறைந்து நின்றோம்
அங்கே
எங்களின் உரோமங்களாலான
கம்பளியின் கதகதப்பில்



கடைவாய் வழியே
உதிரம் சொட்டச் சொட்ட
கோரப்பற்களை நீட்டிக் கொண்டே
எங்களில் ஒருவரின் மாம்சத்தை
சுவைத்துக் கொண்டிருந்தார்
மேய்ப்பர்

வந்த வழியே
பீதியுடன் திரும்பினோம்

நாளையும் ஒரு
மேய்ப்பர் வருவார்
நாளையும் நாங்கள்
மந்தைகளாவோம்
இறைவனே எங்களை
இரட்சிப்பாயாக!

5 மார்ச் 1999 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## பிரிவு

என்றாயினும் ஒருநாள்
நாம் பிரிய வேண்டியவர்களே
நாளை அன்றி
நாளைகளுக்கு நாளையாயினும்

உறவினரால் மரணத்தால்
மாறாய்
நம்மால் கூட
அந்தப் பிரிவு நிகழலாம்
ஒளியை நிலவு இழப்பது மாதிரி
உன்னை நானோ என்னை நீயோ
என்றாயினும் ஒருநாள்
அது நிகழ்ந்து போகலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில அஞ்சல்களாலும்
அழுவதனாலும்
ஸ்பரித்த ஞாபகங்களை
மீள ஸ்பரித்துப் பார்ப்பதனாலும்
வெற்றுப் பிராத்தனைகளாலும்
நிகழாமலிருக்கப் போவதில்லை அது

என்றாயினும் அது நிகழும்
நாளை அன்றி
நாளைகளுக்கு நாளையாயினும்

கண்ணீர் உருப்பாயா அவ்வேளை?
அன்றி
முன்பெல்லாம் உன்மேல் பூத்தூவிய
அதே தேவதைகளை
சாபமிட்டு தொலைப்பாயா?

மெல்லிய தென்றலுக்கே உதிர்ந்து போகும்
அதிமெல்லியதொரு பூவின் இதழுதிர்வாய்
இந்த பிரபஞ்சத்தின்
தவிர்க்க முடியாத சில சலனங்களில்
நம் பிரிவு அது நிகழ்ந்தே தீரும்

உறவினரால் மரணத்தால்
மாறாய்
நம்மால் கூட
அந்தப் பிரிவு நிகழலாம்
விரும்பி சிலவேளை
நாம் விரும்பாமலும் கூட



அழுகை புலம்பல் சாபம்
இவைகளான திரை நீக்கி
திறந்து பார்க்கின்
வந்தே தீருமென்றானதொன்றை
வரவேற்று.........................
..........................................
பிரிவும் ஓர் அனுபவமாய்
அறிந்து கொள்ளுமோ மனம்?

அப்போ
நேசங்கள் ஞாபகித்து
ஞாபகங்களை நேசிக்க
உறவும் பிரிவும் காதலிலே
ஒன்றென்றறிவாய் நீ

02 பெப்ரவரி 1998 தினமுரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாங்கள் அவர்கள் வாக்கிழுத்தல்

சத்தியங்களால் அவர்கள்
எம்மைச் சமரசம் செய்தது
ஆறு கோடைகளுக்கு முன்னதான
ஆவணி மாதமொன்றின்
இள வெயில் பொழுதினில்தான்

வெந்து கிடந்த எங்கள் ரணங்களை
அவர்கள் முன் விரித்து வைத்தோம்
வசிய வார்த்தைகளால்
வருடிக்கொடுத்தார்கள்







எங்கள் வாழ்வுக்கும் வயிற்றுக்குமாய்
தங்கள் ஊண் உறக்கம் துறப்பதாக
மீண்டும்
சத்தியங்களால் அவர்கள்
எம்மைச் சம்மதிக்கச் செய்தார்கள்

எல்லோரும் ஒரு முறை கரகோசித்தோம்
நண்பன் தேனீர் பகிர
எங்கள் விடியலை நினைத்து
சுவைத்தோம்
அவர்களுக்காகப் பிரார்த்தித்து
வழியனுப்பி வைத்தோம்
அவர்களின் பெயரில்
வாக்குகளை இறைத்தோம்

●

இன்றைய இரவும் என்றும் போலவே
கஞ்சிதான் உணவு
நேற்று வாப்பா
குண்டடிபட்டு மௌத்தாகி போனதாய்
கய்யாம் அழுதான்
தூக்கம் மறந்த நடு நிசிப்பொழுதில்
அவர்களை நினைத்தோம்
வெள்ளிகளை எண்ணினோம்
அழுதோம்

●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு கோடைகள் கடந்து போன
மெல்லிய மழை மாத
ஒரு புரட்டாதித் திங்களில்
மீண்டும் அவர்கள்
எங்களூர் வந்தார்கள்

திரும்பிப் பார்த்த போது
ஆறு கடல் குளங்களெல்லாம்
தூர்ந்து போய்
காய்ந்து கிடந்தன

கய்யாம் சொன்னான்
இதயத்தை தொலைத்தவர்களின்
சத்தியத்தை
இனி
நம்பக் கூடாது என்று!

04 செப்டம்பர் 2000





# ஆந்தை அலறாத மரணம்

மனசுள் பயம் திணிக்கும்
இது போலானதொரு இரவினில்தான்
ஆந்தையொன்றின் அலறலினூடே
செத்துப்போனாள் அந்தக் கிழவி

நரைத்துப் பழுத்து
நிதானமாய் மூச்சடங்கினும்
ஆந்தை கத்தியே செத்ததாய் கிழவி
கூடி அழுதது சனம்

இனி ஆந்தையை நினைக்க
மனசுள்
கிழவியின் முகம் வரும்
மரணத்தை நினைக்க
ஆந்தை என்னுள் அலறிப்போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம்
ஆந்தைகளால் நிச்சயிக்கப்படுவதாய்
எனக்குள்ளும்
பயம் சுரக்கும்

பாட்டன் செத்த அன்றும்
ஆந்தையொன்று அலறியதாய்தானே
பாட்டில் சொல்வாள்
அடிக்கடி
பாட்டி எனக்கு

மனசுள் பயம் திணிக்கும்
இதுபோலானதொரு இரவினில்தான்
ஆந்தையொன்றின் அலறலினூடே
செத்துப்போனாள் அந்தக் கிழவி

ஆயினும் ஏனோ
பறவையெதுவும் அலறாத
பாதி ராத்திரியில்
நெஞ்சு கிழிந்து
நெற்றிப் பொட்டில் உயிர் கசிய
துடிப்பின்றி அன்றிரவு
அடங்கிப் போனான் அந்த தோழன்



மரணம்
ஆந்தைகளால் நிச்சயிக்கப்படுவதான
எண்ணங்களில் சந்தேகித்து
உறங்கிப்போக....

"ஆந்தை அலறி
சாவதெல்லாம் அந்தக் காலம்"
என்று
துலக்கமில்லாத கனவினிலே
துப்பாக்கியொன்று
வாய்முளைத்துச் சொல்லி
கெக்கெலித்துச் சிரித்தது!

15 நொவம்பர் 1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இருளில் ரகசியமாய்
உரசிக் கொண்டோர் யாரது?
துண்டு துண்டாய் அண்டமெல்லாம்
தெறிக்கிறது காமப் பொரி

இது
எவனுக்கு எவள் எழுதும்
அவசர ஒளிக் கடிதம்

இரவு நேர மின்னல்கள்
'மினி' 'மினி' பகல்கள்



தேவலோக கன்னிகள்
ஜன்னல் கடந்து போகும் போது
ஜனிப்பதா அந்த மின்னல்கள்?

இறைவன் கொண்ட
நெருப்புக் கோபமிதோ?
நெற்றிக் கண் திறப்பதாலா
வானம்
பற்றிக் கொண்டெரிகிறது?


மின்னல்கள்
இவை என்ன
மேகப் பெண்ணினது
மெல்லிய கூந்தலின்
அழகிய பின்னல்களா?

மின்னல்....மின்னல்
வெட்டி மறையும்போதெல்லாம்
அவள் சிரித்துவிட்டு போன
ஞாபகக் கோடுகளே
வருகிறது
மனக் கண்ணில்

24 மே 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒற்றை விழி கொண்டு
ஒப்பாரி வைக்கிறேனே
இரவெல்லாம் எனை உருக்கி
காதல்
ஒளிக்கடிதம் வரைகிறேனே
மோகத்தீ தலைக்கேற
காமத்தில் வழிகிறேனே
வேகத்தில் வரும் காற்றே
என் தாபத்தை அணைத்துவிடு
எனை போகத்தில் அமிழ்த்தி

03 ஜனவரி 1999

*தடைசெய்யப்பட்ட கவிதை*
*மப்றூக்*





நீயில்லாத ராட்சசப் பொழுதுகளில்
தாகித்தலையும் ஒற்றை ராகங்கள்

உனக்கும் எனக்குமிடையிலான
தூரங்களின்
தவிப்புக்களால்
ஒரு கவிதை செய்து
நான் பாடுவேன்

இரண்டு பாடல்களுக்கு இடைப்பட்ட
மௌன வெளி
பிரித்தறிய முடியாததோர் ராகத்தில்
உரத்துச் சொல்லும்
உன்னை எனக்கு

*தடைசெய்யப்பட்ட கவிதை*
*மப்றூக்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரையின் வரிகளுக்குள்
உன் காதல்
தலைகாட்டி மறைவதுவும்
சில வேளை
தலைகீழாய் தொங்குவதும்....
இசைத்தட்டின் ஓடையினுள்
தேங்கிப்போயிற்று மனசு

உன்னிடமிருந்து திருடப்பட்ட
ஒற்றை மல்லிகை
முடிக்கப்படாத சில கவிதைகள்
சொல்லி மகிழ உன்னோடு
சேதிகள்....
சேமித்து வைத்திருக்கிறது மனசு
எப்போது உன் விடுமுறை?

இதயம் கழற்றி வைத்து
'காற்றில்' நீந்தும்
என் துயர் நிறைந்த இரவுகளின்
கடைசித்துளி ஆறுதலும்
கரைந்து போயிற்று உன்னோடு



இப்போதெல்லாம்
ஒலிக்குறியாய் நதிகள்
என்மீது கொட்டும்
ஒவ்வொரு கணப்பொழுதும்
என் தாகிப்பு
இரட்டிப்பாவதை அறிவாயா நீ?

நட்சத்திரங்களை வேட்டையாடி
கொறித்துக்கொண்டிருக்கிறது
கோபங்கொண்ட என் ஞாபகங்கள்

'சந்திரனை' தொலைத்த
இரவுக்கு
உன் ஊரில்
என்ன பெயர் வைத்திருக்கிறார்கள்?

05 ஏப்ரல் 2003 தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல்

கோபப்படு
உனக்குள்ளிருக்கும் என்னை
நீராவி போல் நீ
வெளியேற்று

ஆயினும்
உன் ஞாபகம் சுமந்தே
நான்
மேகமாய் அலைவேன்

ஆசைப்படு
ஆத்திரம் தீர்ந்த பின்
பெண்ணே
காதலில் மெல்லென கசிந்து
தென்றலாய் என்னை
நீ தழுவு

அப்போ
உன்னாலே
என்னை நான் ஒடுக்கி
மழையாய் துளிப்பேன்
அன்பே
உன்னில்
மறுபடி கலப்பேன்

5 ஜனவரி 1997







# ஒரு செடியின் கதை

விதையாக விழுந்தீர்கள்
மழையாக நீர் வார்த்தோம்
பெரு மரமாகிப் போனீர்கள்
இப்போ
பூத்துக் காய்த்த உங்கள் கனிகளை
நீங்களே புசித்து விட்டு
உயிர் வார்த்த எங்களுக்கோ
நீங்கள் உதிர்ப்பதெல்லாம்
வெறும் சருகுகள்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளிச் சபதமிட்டு
துடித்து நீங்கள் எழுந்தீர்கள்
எங்கள் துயரங்களை துடைப்பதாக
துடைக்கின்ற உங்கள் அலட்சியத்தில்
தொலைந்தே போயின
எங்கள் இலட்சியங்கள்

ஒரு விடியலை தருவதாய்
சத்தியம் செய்தவர்களே
உங்கள் சூரியன்
மரணித்து விட்டதா?

எங்கள் வாழ்க்கைப் பயணத்தில்
வழியாக....
வேண்டாம்
ஒரு வழித்துணையாகவேனும்
வந்திருக்கக் கூடாதா?

எத்தனை இரவுகள்
உங்களுக்காக விழித்திருப்போம்
ஒரேயொரு தாலாட்டு
பாடக் கூடாதா எங்களுக்கு?



எங்கள்
அட்சய பாத்திரங்களையே
அளித்தோமே உங்களுக்கு
பதிலாய்
ஒரு பிச்சைத் தட்டையாவது
போடக்கூடாதா எங்களுக்கு?

எங்கள் நாமங்களை செபித்துத்தானே
இந்த வரங்களைப் பெற்றீர்கள்
வரம் பெற்ற பின்பு ஏன்
எம்மை
சாத்தான்களாக சபிக்கிறீர்கள்

ஏமாந்தவர்கள் நாங்கள்தான்
சலங்கை பூட்டிய
உங்கள் பேச்சிலும்
சாயம் பூசிய
சொற்களின் வீச்சிலும்
பூப்பார்த்த மழலைகளாய்
ஏமாந்தவர்கள் நாங்கள்தான்

ஓ
கொம்பு முளைத்த தலைவர்களே!
இயேசுவாகத்தானே
அனுப்பி வைத்தோம் உங்களை
ஒப்பனைகளை நீங்கள்
உதறிப்போட்ட பின்புதான்
யூதாசாகக் கண்டுகொண்டோம்

3 ஜூலை 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என் கிராமத்து ஆறு
ஆறாகவே இருக்கிறது
என்னதான் மழை பெய்தாலும்
எப்படி நிரம்பினாலும்
என் கிராமத்து ஆறு
ஏழானதில்லை!

03 நவம்பர் 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை செய்யப்பட்ட கவிதைகளை
விடுவிப்பதற்குத்
துணிச்சல் வேண்டும்
அந்தத் துணிச்சல்
மப்றூக்கிடம் இருக்கிறது

கவிதைகளில்
சிறைக் கதவுகள்
திறக்கும் சத்தமும்
விலங்குகள் ஒடியும்
சத்தமும் கேட்கிறது

இந்த உணர்வுகளின்
சுதந்திரத்தை
வாழ்த்துகிறேன்.

*கவிக்கோ*
*அப்துல் ரகுமான்*



ISBN 955-98318-0-1

Printed By Comprint Systems # 0777 636138

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org